நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.


கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை) -** | **வேலூர்** |
| | **அரக்கோணம்** |

தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (11)

ஏப்ரல் 3 புதன்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜூன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஏப்ரல் 3 புதன்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், "பாசறையில் தொகுத்த முத்துக்கள்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளி வருகிறது.**

**- ஆசிரியர்**

பத்தாண்டு கால ஆட்சியில் கச்சத்தீவு குறித்து நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?

# பிரதமர் மோடி பொய்யைத் தவிர வேறு எதுவும் பேசுவதில்லை!

## ஆயிரம் விளக்கில் வாக்கு சேகரித்த போது வேட்பாளர் தயாநிதி மாறன் எம்.பி. பேட்டி!

சென்னை, ஏப்.2-

பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் கச்சத்தீவு குறித்து எடுத்த நடவடிக்கை என்ன என்றும் பிரதமர் மோடி பொய்யைத் தவிர வேறு எதுவும் பேசுவதில்லை என்றும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தேர்தல் பிரச்சாரத்தின்போது செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் மத்திய சென்னைத் தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறன் பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

நேற்று (1.4.2024 - திங்கட்கிழமை) சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு. கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் ஆகியோர் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதில் மு.க.தமிழரசு, அன்பகம் கலை, நா.எழிலன் எம்.எல்.ஏ., கலை கதிவரன், பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் தயாநிதி மாறன் தனது தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் திறந்தவெளி வாகனம் மற்றும் நடைபயணம் மேற்கொண்டு "உதய சூரியன்" சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்து வருகிறார்.



மாலை 4 மணிக்கு 110அ வட்டம் கக்கன் காலனி பிள்ளையார் கோயில் அருகில் (பூங்கா பக்கத்து தெரு) பிரச்சாரம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து காமராஜபுரம் 2வது தெரு, காமராஜபுரம் 4வது தெரு, காமராஜபுரம் மெயின் ரோடு, இராஜாஜி 2வது தெரு, புஷ்பா நகர் பிரதான சாலை, இராஜாஜி 3வது தெரு, புஷ்பா நகர் 1வது தெரு, டேங்க் பணிட் பேரல் ரோடு (ஒரு வழி பாதை)

**110வது வட்டம்**

கோத்தரி சாலை, ஜெயலட்சுமிபுரம் 1வது தெரு, ஜெயலட்சுமிபுரம் பிரதான சாலை, சொக்கட்டான் சாலை, வள்ளுவர் கோட்டம் பிரதான சாலை, சீதா நகர், சிவகங்கா சாலை, அரிங்டன் ரோடு வழியாக, 6வது அவென்யூ, 7வது அவென்யூ.

**109வது வட்டம்**

கிழக்கு நமச்சிவாய புரம், மேற்கு நமச்சிவாயபுரம், நெல்சன் மாணிக்கம் சாலை, திருவேங்கடபுரம் 2வது தெரு, திருவள்ளுவர் புரம் 2வது தெரு, சண்முகனார் சாலை, சக்தி நகர் 2வது தெரு, அபித் நகர், ராதாகிருஷ்ணன் நகர் ஜங்ஷன்.

**109அ வட்டம்**

அருணாசலம் நகர் 1வது தெரு, எப்5 காவல் நிலையம் அருகில், அண்ணா சிலை, பஜனை கோயில் தெரு, ஸ்ரீராமபுரம், வன்னியர் தெரு, சூளைமேடு பிரதான சாலை.

**112வது வட்டம்**

சூளைமேடு பிரதான சாலை வழியாக சுபேதார் தோட்டம் சிறிய குடியிருப்பு, ஆரோக்கியசாமி தெரு, ராஜபுரணிக்கர் தெரு, முத்துமணி தெரு, மைனர் டிரஸ்ட்புரம் கால்வாய் வழியாக, புலியூர் 1வது பிரதான சாலை, டிரஸ்ட்புரம் 2வது குறுக்குத் தெரு. டிரஸ்ட்புரம் பிரதான சாலை.

**112அ வட்டம்**

புலியூர் 1வது பிரதான சாலை - டிரஸ்ட்புரம் 6வது தெரு சந்திப்பு, டிரஸ்ட்புரம் 10வது குறுக்குத் தெரு, புலியூர் 2வது பிரதான சாலை, பொன்மணி திருமண மண்டபம், பாரதீஸ்வரர் காலனி 1வது தெரு, ஈஸ்வரர் நகர், ஈஸ்வரர் நகர் 3வது தெரு, ஈஸ்வரர் நகர் 5வது தெரு, புலியூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, முத்து தோட்டம், சிவன் கோயில் தெற்கு தெரு, சிவன் கோயில் தெரு, சிவன் கோயில் குறுக்குத் தெரு, வெள்ளாளர் தெரு, தெற்கு சிவன் கோயில் தெரு, சிவன் கோயில் குறுக்குத் தெருவில் நிறை வடைந்தது.

**தயாநிதி மாறன் பேட்டி!**

வாக்கு சேகரிப்பின் போது, மத்திய சென்னை தி.மு.க., வேட்பாளர் தயாநிதி மாறன் நிருபர்களிடம் கூறியதாவது :

"எங்கு சென்றாலும் தமிழ்நாடு முதல்வர் மீதும், இந்தியா கூட்டணி மீதும் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார்கள். கடந்த முறையை விட இந்த முறை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்.

பிரதமர் மோடி தமிழகம் வருவதை வரவேற்கிறோம்.

ஆனால், சென்னையில் வெள்ளத்தின் போது வராதது ஏன்?

தமிழ்நாடு அரசு 6000 ரூபாய் கொடுத்தது, மோடி பத்து பைசா கொடுத்தாரா?

அப்படிப்பட்டவர் ஓட்டு என்றால் மட்டும் சிரித்துக் கொண்டு, நடித்துக்கொண்டு வருவதை வன்மையாக கண்டிக்கிறோம். கொரோனா காலத்தில் நானும், அமைச்சர் சேகர் பாபுவும் இங்குள்ள நடுத்தர, ஏழை மக்களுக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை செய்தோம். குடிநீர், கழிவுநீர் பிரச்சனைகளை சரி செய்தோம். தொடர்ந்து மக்களோடு, மக்களாக இருக்கிறோம்."

**கேள்வி :** கச்சத்தீவு குறித்தான பா.ஜ.கவின் விமர்சனத்திற்கு பதில் என்ன சொல்றீங்க?

"ஒருவரைப் பற்றி குறை கூறும் முன் உங்கள் முதுகை கொஞ்சம் திரும்பிப் பாருங்கள் என்று சொல்கிறோம். பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த பா.ஜ.க ஏன் கச்சத்தீவு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? பா.ஜ.க கூட்டணியில் இருந்த அ.தி.மு.க ஏன் வாய் திறக்கவில்லை?

தேர்தல் பத்திரம் மோசடி, பி.எம்.கேர்ஸ் ஊழல், சி.ஏ.ஜி அறிக்கை இதையெல்லாம் திசை திருப்பத் தான் தேர்தல் சமயத்தில் அவர்கள் கச்சத் தீவு குறித்துப் பேசுகிறார்கள். பிரதமர் மோடி பொய்யை தவிர வேறு எதுவும் பேச மாட்டேன் என்று உறுதி மொழி எடுத்துள்ளார். நியாயத்தை அவரிடம் எதிர்ப்பார்க்க முடியாது!"

இவ்வாறு, தயாநிதி மாறன் கூறினார்.

இப்பிரச்சாரத்தில் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், பி.எல்.சி. உறுப்பினர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட

# இளைஞரணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று 02.04.2024 செவ்வாய்கிழமை காலை 10 மணி அளவில் திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் அப்துல்மாலிக் பங்கேற்க உள்ளார். இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எம்.சுகுமார், தா.மோதிலால், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன் உள்ளிட்டோர் நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

பொருள்: அரக்கோணம் திருவள்ளூர் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் தமிழச்சிதங்கபாண்டியனை ஆதரித்து சைதை மேற்கு பகுதி சிறுபான்மை அணியின் சார்பில் சைதாப்பேட்டை மீட்பர் இயேசு தேவாலயத்தில் ஈஸ்டர் பெருவிழா ஆராதனை நிகழ்வில் ஞாயிற்றுகிழமை காலை பகுதி அமைப்பாளர் ஜி.ஜே.மோசஸ் தலைமையில் சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வட்டகழகசெயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா மற்றும் பால்கார்ரவி, ஆர்,கோபி, தமீம்அன்சாரி, விஜய், ஐ.பழனி மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

வேட்பாளர் டி.ஆர்.பாலு – அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறக்கின்றனர்

# மௌலிவாக்கத்தில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தேர்தல் பணிமனை!

## படப்பை மனோகரன் பங்கேற்பு – ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப். 2 -

காஞ்சி வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய 'இந்தியா' கூட்டணி மௌலிவாக்கம் ஊராட்சியில் தேர்தல் பணிமனையை இன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா.மோ. அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளர் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் திறந்து வைக்கின்றனர். இது குறித்து ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் மௌலிவாக்கம் ஊராட்சியில் இன்று (2.4.2024 செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இந்தியா கூட்டணியின் தேர்தல் பணிமனையை சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற இந்தியா கூட்டணியின் வேட்பாளர் - கழக பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமுக கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட தேர்தல் பொறுப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி கூட்டணி கட்சியினர், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் சோழவரம் தெற்கு –

# வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்தில் வேட்பாளர் சசிகாந்த் செந்திலை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## இரா.கிரிராஜன் எம்.பி. – நா.சந்திரபாபு பங்கேற்பு!

சென்னை, ஏப்.2

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களை ஆதரித்து சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் இரா.கிரிராஜன் எம்.பி. மற்றும் மாதவரம் தொகுதி பொறுப்பாளர் நா.சந்திரபாபு முன்னிலையில் நாளை (03.04.2024, புதன்கிழமை) காலை 7.00 மணியளவில் நெற்குன்றம் சிவன் கோவில் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றியத்திலும் மற்றும் மாலை 3.30 மணியளவில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் பம்மதுகுளத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி தேர்தல் பரப்புரையை தொடங்கி வைக்க இருக்கிறhர்கள். எனவே கழக தோழர்கள், இந்திய கூட்டணிக் கட்சி நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**சோழவரம் தெற்கு ஒன்றியம்**

நெற்குன்றம் காலை 7.00 மணிக்குத் தொடங்கி, சோத்துப்பெரும்பேடு - 7.30, காரனோடை - 8.00, பழைய எருமை வெட்டி பாளையம் - 8.30, புதிய எருமை வெட்டி பாளையம் - 9.00, ஆத்தூர் - 9.30, சோழவரம் -10.00, ஒரக்காடு - 10.30, பூதூர் - 11.00, பெருங்காவூர் - 11.30, கும்மனூர் பிற்பகல் -12.00, ஆங்காடு- 12.30, பாடியநல்லூர் - 1.00, நல்லூர் - 1.30, அலமாதி - 2.00.

**வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம்**

பம்மதுகுளம் - 3.00, பொத்தூர் - 3.30, வெள்ளானூர் -4.00, மோரை -4.30, அரக்கம்பாக்கம் - 5.00, பாண்டேஸ்வரம் - 5.30, வெள்ளச்சேரி - 6.00, பாலவேடு -6.30, ஆலத்தூர் இரவு - 7.00 மணிக்கு, கரலப்பாக்கம் இரவு - 7.30 மணிக்கு வாக்கு சேகரிக்கிறார்.

இவ்வாறு மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மத்திய சென்னை தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## எழும்பூர் தாணா தெருவில் தொடங்குகிறார்!

சென்னை, ஏப்.2-

இன்று (02.04.2024 - செவ்வாய்க்கிழமை) கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.

2024 ஏப்ரல் 2 - செவ்வாய்க்கிழமை

மாலை 4.30 மணி டானா தெரு, எழும்பூர், சென்னை

மாலை 5.30 மணி - சுதந்திர தின பூங்கா அருகில், நுங்கம்பாக்கம், சென்னை

இப்பிரச்சாரக் கூட்டத்தில் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், BLC உறுப்பினர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதியில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. தலைமையிலும் துணை மேயர் மு.மகேஷ்குமார் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி முன்னிலையில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் சைதை மேற்கு பகுதி திமுக தலைமை தேர்தல் பணிமனையினை மாவட்ட கழகச் செயலாளரும் மருத்துவம் (ம)மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், தா.மோகன்குமார் எம்.சி., தோழமை கட்சி நிர்வாகிகள் ம.ஜேக்கப், மணிகண்டன், வெங்கடேசன், எஸ்.ஏ.சாகுல்அமீது, எம்.அன்சாரி, அப்துல்சாபர், அப்துல்கலாம், சைதைஅன்புதாசன் அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, அஞ்சல் ராமன், வழக்கறிஞர் ஜெகதீசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழமை கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.